**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051876

1. District மாவட்டம்: DVAC Hqrs. | PS: காவல்நிலையம்: DVAC Hqrs | Year: ஆண்டு: 2020 | FIR No.: மு.த.அ. எண்: 17 | Date: நாள்: 28.11.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7, 7A, 8 and 12
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல்: 27.11.2020 | Date to நாள் வரை: 27.11.2020
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல்: 20.00 hrs | Time to : நேரம் வரை: 24.00 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 28.11.2020 | Time : நேரம்: 00.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 28.11.2020 | Time : நேரம்: 02.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: SOUTH WEST 3 KMS.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி: SUB-REGISTRAR OFFICE Alandur @ Nanganallur, Chennai - 600 061.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: C. K. KUMARAN | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம்: Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: Chennai District Deputy Inspection Cell Officer | (g) Address : முகவரி: Collector office, Chennai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   J. Jeya Prakash, SRO, Alandur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Suspicious bribe amount Rs.77,130/=

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Rs.77,130/=

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Given in separate sheets annexed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K.S.Anitha Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the complainant

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

K.S. [signature] 28/11/2020
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28-11-2020 / 01.15 hrs.

Name: பெயர் K.S.ANITHA
Rank: நிலை Inspector of police
Special Investigation cell, VLAC, Chennai-16.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.17/2020, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 பிரிவுகள் 7, 7A, 8 மற்றும் 12 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண். 12ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளராகிய என்னிடம் (K.S.அனிதா) எனது பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை செய்யக்கோரி 27.11.2020-ம் தேதி இரவு 12 மணியளவில் அளித்த சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ஊ,மு,குமரன் அவர்களின் புகாரின் பேரில் இன்று (28.11.2020) அதிகாலை 00.30 மணியளவில் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

திரு.C.K.குமரன் அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு :

"

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.C.K.குமரன்,<br>வட்டாட்சியர் / மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை மாவட்டம்,<br>சென்னை-1. | காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வுக் குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-600016. |

அ1/207/2020 நாள்: 27.11.2020

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-61, நங்கநல்லூர், முதல் மெயின் ரோடு, எண்.12-ல் செயல்பட்டு வரும் ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை நாள் 27.11.2020 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

—

சென்னை மாவட்ட ஆய்வுக்குழுமம் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 27.11.2020-ம் தேதி சென்னை-61, நங்கநல்லூர், முதல் மெயின் ரோடு, எண்.12-ல் செயல்பட்டு வரும் ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின்போது கணக்கில் வராத மொத்த பணம் ரூ.77,130/- மற்றும் நடவடிக்கையின் செயல்முறை ஆணை மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுத் தணிக்கை செயல் முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- C.K.குமரன்
மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,
சென்னை-1.

To

Tmt.K.S.Anitha, Inspector to register FIR and investigate.

Sd/- M.Kumaraguruparan,
DSP/SIC-2
27.11.2020

Sir,

Received the complaint and after getting permission, a case in V&AC, HQRS, Cr.No.17/2020 u/s 7, 7A, 8 and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 was registered on 28.11.2020 at 00.30 hrs. Sd/- K.S.Anitha, 28/11/2020 Inspector of Police, SIC, V&AC, Chennai.

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்புப் புலனாய்வுக்குழு-2 காவல் துணை கண்காணிப்பாளரும் இணைந்து இன்று (27.11.2020) சென்னை-61, நங்கநல்லூர், முதல் மெயின் ரோடு, எண்.12-ல் செயல்பட்டு வரும் ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

..........................................................................................................

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | 1. திரு.C.K.குமரன்,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழும அலுவலர்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1.<br>2. திரு.ம.குமரகுருபரன்,<br>துணைக் காவல் கண்காணிப்பாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>3. திருமதி.எஸ்.ஜூடி அபிகெய்ல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16.<br>4. திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

| | |
|---|---|
| | 5. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்புப் புலனாய்வுக்குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>சென்னை-16. |

சென்னை-61, நங்கநல்லூர், முதல் மெயின் ரோடு, எண்.12-ல் செயல்பட்டு வரும் ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் மற்றும் சில அலுவலர்கள் அரசு பணிகளை செய்வதற்கு லஞ்சம் பெறுவதாக நம்பகமான ரகசிய தகவல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவிற்கு கிடைத்தது. இந்த தகவல் சென்னை மாவட்ட ஆய்வுக் குழுவிடம் பகிரப்பட்டது. மேற்படி தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உயர் அதிகாரிகளிடம் தெரிவித்து அனுமதி பெற்று, பின் சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப் பிரிவு-2 அலுவலர்களும் இணைந்து இன்று (27.11.2020)இருதுறை திடீர் கூட்டாய்வு செய்வதற்கு சென்னை, நங்கநல்லூர் முதல் மெயின் சாலையில் இயங்கி வரும் மேற்படி ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தை இன்று பகல் 12 மணி முதல் கண்காணித்து வந்தபோது இரவு சுமார் 8.00 மணியளவில், மேற்படி அலுவலகத்திற்கு அருகே கிழக்கு பக்கத்தில் நங்கநல்லூர் முதல் பிரதான சாலையின் வடக்கு நோக்கி TN23 AM 8529 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Suzuki Swift Dzire Grey Colour Car நிறுத்தப்பட்டிருந்தது. கார் அருகே மேற்படி சார் பதிவாளர் அலுவலக தரை தளத்தின் நுழைவாயிலில் நின்றிருந்த ஆலந்தூர் சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடம் அதே அலுவலகத்தில் ஒப்பந்த ஊழியராக பணிபுரியும் ரா.ஆறுமுகம் என்பவர் கருப்பு நிற கைப்பையை சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடம் கொடுத்தார். அதை திரு.ஜெயப்பிரகாஷ் அவர்கள் தனது வலது கையால் வாங்கிக் கொண்டு மேற்படி ஆறுமுகத்தை பார்த்து எவ்வளவு இருக்கிறது என்று கேட்டார். அதற்கு ஆறுமுகம் எழுபதாயிரத்து ஐம்பது இருப்பதாக தெரிவித்தார். அதை வாங்கிக் கொண்டு மேற்படி காரை ஸ்டாட் செய்து புறப்பட தயாரான போது சோதனை குழுவினர் வழி மறித்து தங்களை சார் பதிவாளரிடம் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி சார் பதிவாளர் அவருடன் நின்றிருந்த மேற்படி ஆறுமுகம் ஆகியோரையும் அவர்களுக்கு சுமார் 40 அடி தூரத்தில் மேற்படி அலுவலகம் அருகே இரு சக்கர வாகனத்தில் தோள் கைப்பையுடன் புறப்பட தயாராக இருந்த மேற்படி சார் பதிவாளர் அலுவலக உதவியாளர் திரு.எச்.பிரகாஷ் ஆகிய மூவரையும் அவ்விடத்திலேயே நிறுத்தி தனித்தனியே சோதனை மேற்கொள்ளப்பட்டது.

2. முதலில் சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடமிருந்த கருப்பு நிற கைப்பையை சோதனை செய்ததில் அதற்குள் இருந்து இரண்டு வெள்ளை நிற கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். முதல் வெள்ளை நிற கவரை ஆய்வு செய்தபோது அந்த கவரின் திறப்பு பகுதியின் ஓரத்தில் 49050 + சுந்தர் என்று கருப்பு நிற மையினால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவரில் பணம் கத்தையாக காணப்பட்டது. அந்த பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.49,050/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே ரூ.2000 x 9, ரூ.500 x 62 மற்றும் ரூ.50 x 1 ஆகும்.

3. இரண்டாவது வெள்ளை நிற கவரை ஆய்வு செய்தபோது அதிலும் பணம் காணப்பட்டது. அதில் உள்ள பணத்தை எண்ணிப் பார்த்ததில் பணம் ரூ.21,000/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே ரூ.2000 x 6, ரூ.500 x 18 ஆகும். இந்த இரண்டு வெள்ளை நிற கவர்களில் உள்ள பணம் குறித்து சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். இந்த ஒரு முறை மன்னித்து விடுங்கள் சார் என்றும் தனது கையால் அவரது நெற்றியில் அய்யோ போச்சே என்று மாறி மாறி அடித்துக் கொண்டார். மேற்படி பணம் ரூ.49,050/- மற்றும் ரூ.21,000/- ஆக மொத்தப் பணம் ரூ.70,050/- லஞ்சப்பணமாக தெரிவதால் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

4. மேலும் மேற்படி TN23 AM 8529 என்ற பதிவு எண் கொண்ட Maruthi Suzuki Swift Dzire Grey Colour Car தன்னுடைய சொந்த வாகனம் என்றும் தனது அலுவலக பணிக்காக பயன்படுத்தி வருவதாக சார் பதிவாளர் தெரிவித்தார். மேற்படி வாகனத்தை சோதனை செய்தபோது அதில் டிரைவர் இருக்கைக்கு இடது புறமுள்ள இருக்கையில் கருப்பு நிற சிறிய பர்ஸ் காணப்பட்டது. அந்த கருப்பு நிற பர்ஸை சோதனை செய்தபோது அதில் பணம் ரூ.1,570/- காணப்பட்டது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே ரூ.500 x 2, ரூ.100 x 4, ரூ.20 x 4 மற்றும் ரூ.10 x 9 ஆகும். இந்த பணம் குறித்து கேட்டதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இந்த பணம் ரூ.1,570/- லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

5. மேலும் சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் தனது மணிபர்சிலிருந்து பணம் ரூ.1,230/- எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து அவரிடம் கேட்டதற்கு அவரது செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட சொந்த பணம் என்று தெரிவித்தார். மேலும் இன்றைய தேதியில் மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பண இருப்பு பதிவேட்டில் சொந்தப் பணம் ரூ.200/- என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். ஆதலால் பணம் ரூ.1,230/-யில் சொந்த பணத்தை தவிர்த்து மீதமுள்ள பணம் ரூ.1,030/-ற்கு சரியான விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் ரூ.1,030/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஆலந்துார் சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடம் இருந்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.72,650/- ஆகும்.

6. மேலும் தொடர்ந்து அருகில் இருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் ஆறுமுகம் என்றும் தான் ஆலந்துார் சார் பதிவாளர் அலுவலகத்தில் TCS நிறுவனத்தின் கிளை நிறுவனம் The Zigma Technologies India (P) Ltd., என்ற நிறுவனம் மூலம் கேமரா ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் மேற்படி சார் பதிவாளரிடம் கொடுத்த கருப்பு நிற பை குறித்து கேட்டதற்கு மேற்படி கருப்பு நிற பை சார் பதிவாளருக்கு சொந்தமானது என்றும் சார் பதிவாளர் உத்தரவின்பேரில் தினமும் தான் சார் பதிவாளரின் சாப்பாட்டு பை மற்றும் தாங்கள் என்னிடம் கான்பித்த கருப்பு நிற Fantasy ரெக்சின் அலுவல் கைப்பை ஆகிய இரண்டையும் அவரது காரில் வைப்பதாகவும் அவ்வாறு ஒவ்வொரு நாளும் மாலையில் அலுவல் கைப்பையை வைக்கப்போகும் போது எங்களது சார் பதிவாளர் அலுவலக தரை தளத்தில் செயல்பட்டு வரும் ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் என்ற ஆவண எழுத்தர் அலுவலகத்தை சேர்ந்த திரு.காமேஷ்வரன் என்பவர் என்னையும் சார் பதிவாளரையும் பின்தொடர்ந்து வந்து சார் பதிவாளர்

முன்னிலையில் நான் சார் பதிவாளரின் அலுவல் கைப்பையை காரில் வைத்ததும் அதை அவர் திறந்து பணத்தை வைத்துவிட்டு சென்றுவிடுவார். எவ்வளவு பணம் கொடுப்பார் என்று எனக்கு தெரியாது. அதுபோல் இன்றும் இரவு சுமார் 8 மணியளவில் நான் சார் பதிவாளர் உத்தரப்படி அவரது கருப்பு நிற அலுவல் கைப்பை மற்றும் சாப்பாட்டு பையை சார் பதிவாளருடன் கூடவே சென்று அவரது மேற்படி காரின் முன்புறத்தில் ஓட்டுநர் இருக்கைக்கு அருகிலுள்ள முன்இருக்கையில் வைத்தேன். மேற்படி திரு.காமேஷ்வரன் என்னை பின்தொடர்ந்து வந்து சார் பதிவாளர் முன்னிலையில் மேற்படி அலுவல் கைப்பையை திறந்து இரண்டு வெள்ளை நிற கவர்களை உள்ளே வைத்தார். சார் பதிவாளர் அவரிடம் ஒ.கே என்று கூறினார். சற்று நேரத்தில் திரு.காமேஷ்வரன் வெளியே சென்றுவிட்டார். அந்த சமயத்தில் தாங்கள் எங்களை சோதனை செய்தீர்கள்.

7. மேற்படி ஒப்பந்த ஊழியர் திரு.ஆறுமுகத்திடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணம் எடுத்து ஆஜர் செய்ததை எண்ணிப்பார்த்தபோது பணம் ரூ.3,500/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே ரூ.500 x 5, ரூ.200 x 4, ரூ.100 x 2 ஆகும். மேலும் திரு.ஆறுமுகம் அவர்கள் இன்றைய தேதியில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பணப் பதிவேட்டில் தனது சொந்த பணம் ரூ.1,500/- என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். ஆதலால் பணம் ரூ.3,500/-யில் சொந்த பணத்தை தவிர்த்து மீதமுள்ள பணம் ரூ.2,000/- குறித்து கேட்டதற்கு தனது சொந்த ஊரான திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகா கொட்டை கிராமத்தில் தனது தந்தையார் திரு.ராமதாஸ் அவர்கள் வாத நோயால் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருப்பதால் அவரை பார்ப்பதற்காக ஊருக்கு செல்ல இருப்பதாக சார் பதிவாளரிடம் தெரிவித்தேன். அப்போது அவர் என்னிடம் ரூ.2,000/- கொடுத்தார். அதை நான் தந்தையின் மருத்துவ செலவிற்காக வைத்திருக்கிறேன். இந்த பணம் ரூ.2,000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

8. மேலும் தொடர்ந்து அருகில் இருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் பிரகாஷ் என்றும் தான் ஆலந்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணம் எடுத்து ஆஜர் செய்ததை எண்ணிப்பார்த்தபோது பணம் ரூ.4,910/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் விவரம் முறையே ரூ.500 x 7, ரூ.200 x 3, ரூ.100 x 7, ரூ.50 x 2 மற்றும் ரூ.10 x 1 ஆகும். மேலும் திரு.பிரகாஷ் அவர்கள் இன்றைய தேதியில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பணப் பதிவேட்டில் தனது சொந்த பணம் ரூ.430/- என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். மீதமுள்ள பணம் ரூ.4,480/- குறித்து கேட்டதற்கு தனது அலுவலகத்தின் தரை தளத்தில் இயங்கி வரும் ஆவண எழுத்தர் திருமதி.அகல்யா அவர்களிடம் பணியாற்றும் பழவந்தாங்கலை சேர்ந்த திரு.பாபு என்பவரிடம் கடனாக வாங்கியதாக தெரிவித்தார். இந்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததால் மேலும் விசாரணை மேற்கொள்ள மேற்படி பணம் ரூ.4,480/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

9. மேலும் மேற்படி எச்.பிரகாஷ் வைத்திருந்த Priority என்று எழுதப்பட்ட கருப்பு நிற தோள் கைப்பையை ஆய்வு செய்ததில் அதில் கீழ்கண்ட ஆவணங்கள் இருந்தது.

| Sl.No | File Description | No of Sheets |
|---|---|---|
| 1 | Return of excess Non- Judicial stamp duty in the name of Tr.A.Hari Narayanan for Stamp Paper No.C-684317 Dated: 04.03.2020 | 9 Sheets |
| 2 | Return of excess Non- Judicial stamp duty in the name of Tr.D.Santhosh Raj for Stamp Paper No.C-684294 Dated: 02.03.2020 | 9 Sheets |
| 3 | Return of excess Non- Judicial stamp duty in the name of Tr.P.Muthu. | 7 Sheets |
| 4 | Chennai Zone DIG Registration proceedings Na.Ka No.3240/A1/2019 , Dated: .07.2020 | 3 Sheets |
| 5 | South Chennai District Registrar (Admin) (AIG Rank) proceedings Letter No:4003/E4/2020 , Dated: 24.07.2020 | 1 Sheet |
| 6 | District Registar (Admin) Chennai South Letter No:5272/A2/2020 Dated:12.08.2020 | 3 Sheets |
| 7 | Letter sent to District Registrar (Admin) South Chennai, in Registration Department No:126/2020, Dated:16.07.2020 by Tr.J.Jaya Praksh, SRO, Alandur, @ Nanganallur | 4 Sheets |
| 8 | Letter sent to District Registrar (Admin) South Chennai, in Registration Department No:122/2020, Dated:09.07.2020 by Tr.J.Jaya Praksh, SRO, Alandur, @ Nanganallur | 2 Sheets |
| 9 | Letter sent to Treasury Officer, in Registration Department No:147/2020, Dated:08.09.2020 by Tr.J.Jaya Praksh, SRO, Alandur, @ Nanganallur | 1 Sheet |
| 10 | Letter sent to Sub Registrar, Alandur, in Registration Department No:5780/A1/2020, Dated:03.08.2020 by Sub Registrar, Chennai. | 6 Sheets |
| 11 | South Chennai District Registrar (AIG Rank) proceedings Na.Ka.No:217/E2/20120 , Dated: 27.07.2020 | 8 Sheets |
| 12 | Treasury and Accounts Department Na.Ka.No.7464/2020/M2, Dated: 08.2020 | 2 Sheets |

இந்த ஆவணங்கள் குறித்து கேட்டதற்கு தற்போது IFHRMS என்ற சாப்ட்வேர் அரசு அலுவலகங்களில் நிதி பரிவர்த்தனைகளுக்காக பயன்படுத்தி வருவதாகவும் அதேபோன்று தனது அலுவலகத்திலும் பயன்படுத்தி வருவதாகவும் அந்த தளம் சரிவர சர்வர் இணைப்பு கிடைப்பதில்லை என்றும் அது இரவு நேரங்களில் தான் சரியாக வேளை செய்கிறது என்றும் எனவே வீட்டில் வைத்து வேலை செய்வதற்காக எடுத்து செல்வதாக தெரிவித்தார். பணியில் தாமதம் ஏற்படுவதை தடுக்க மேற்படி 12 ஆவணங்களும் மேற்படி திரு.பிரகாஷ் அவர்களிடம் திருப்பி அளிக்கப்பட்டது. மேலும் இன்றைய தேதியில் இவ்வலுவலகத்தில் 38 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் கிரையப் பத்திரமாக - 12 ஆவணங்களும், Deposit of Title deeds – 11 ஆவணங்களும், Construction agreement deed – 6 ஆவணங்களும், General Power of Attorney – 3 ஆவணங்களும், Release deed – 2 ஆவணங்களும், Settlement deed – 1 ஆவணமும்,

Cancellation deed - 1 ஆவணமும், Special power attestation – 1 ஆவணமும் மற்றும் Proprietorship registration document – 1 ஆவணமும் ஆகும்.

10. இந்த கூட்டுத்தணிக்கையின்போது சார் பதிவாளர் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களிடமிருந்து பணம் ரூ.49,050/-, ரூ.21,000/-, ரூ.1,570/- மற்றும் ரூ.1,030/- ஆக மொத்தம் பணம் ரூ.72,650/-, இவ்வலுலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.பிரகாஷ் என்பவரிடமிருந்து பணம் ரூ.4,480/- ஆக மொத்தம் பணம் ரூ.77,130/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி முடிக்கப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று 27.11.2020 இரவு 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நள்ளிரவு 12 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.C.K.குமரன்,
மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,
சென்னை-1.

ஒப்பம்/-திரு.ம.குமரகுருபரன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/- திருமதி.சா.ஜூடி அபிகெய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.சு.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு-2,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-திரு.ஜெ.ஜெயப்பிரகாவஷ்
சார் பதிவாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
ஆலந்தூர்.

ஒப்பம்/- ஹ.பிரகாஷ்,
உதவியாளர்,
சார் பதிவாளர் அலுவலகம்,
ஆலந்தூர்.

ஒப்பம்/-ரா.ஆறுமுகம்,
IP Camera Operator,
சார் பதிவாளர் அலுவலகம்,
ஆலந்தூர்.

28/11/2020

Inspector of Police
Special Investigation Cell
Vigilance and Anti-Corruption
Chennai - 600 016.